சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

முன்னிலை : திருமதி.A.பர்சாத் பேகம் பிஏ.எம்.எல்.,

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 17 -ம் நாள்,வெள்ளிக்கிழமை.

**எச்.எம்.ஓ.பி.எண்.17/2026**

**(CNR.No.TNTT19 - 000113 - 2026)**

சங்கீதா ... மனுதாரர்

/ எதிர் /

மணிமாறன் ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 03.07.2026 ,அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.ராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யாமல் திருப்பப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதி அவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும் மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1)(i-a) ன் கீழ், 23.08.2018 ல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே தென்காசி மாவட்டம், அருணாப்பேரியில் உள்ள அருண்சுபா திருமண மண்டபத்தில் வைத்து இந்து

முறைப்படி நடந்த திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடும்படிக்கும் செலவுத்தொகை கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் -**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 23.8.2018 அன்று தென்காசி மாவட்டம், அருணாப்பேரியில் உள்ள அருண்சுபா திருமண மண்டபத்தில் வைத்து இரு வீட்டார் பெரியோர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் வைத்து இந்து முறைப்படியும், சாதி சம்பிரதாய முறைப்படியும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு மனுதாரர் பெற்றோர் மனுதாரருக்கு 10 பவுண் தங்க நகையும், ரூ.1,00,000/-ரொக்கமும் வழங்கினார்கள். எதிர்மனுதாரருக்கு 1/2 பவுண் மோதிரம் வழங்கப்பட்டது. ரூ.1,00,000/- மதிப்புள்ள வீட்டுக்கு தேவையான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன. எதிர்மனுதாரர் மனுதாரரிடம் மேலும் 10 பவுண் நகை வாங்கிவருமாறு மனுதாரரை வற்புறுத்தியுள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரரிடம் திருமணத்திற்குண்டான ஒரு வருட செய்முறை கட்டுகளை வாங்குவதற்காக மட்டுமே அன்பாக நடந்துகொள்வது போல் நடித்து வந்தார். மனுதாரர் வீட்டிலிருந்து செய்முறை கட்டுகள் பெற்றுக்கொண்டபின்பு எதிர்மனுதாரர் மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிடுவார். இந்நிலையில் மனுதாரரின் மாமியார் கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு இறந்தார். அந்த இறப்பிற்கு வந்த மனுதாரரை எதிர்மனுதாரர் அனைவர் முன்னிலையிலும் அடித்து அவமானப்படுத்தி வந்தார். எதிர்மனுதாரர் மனுதாரரிடம் வீண் பிரச்சனை செய்து மனுதாரரை அடித்து அவரது பெற்றோர்

வீட்டிற்கு மீண்டும் அனுப்பியுள்ளார். எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு 20,000 சம்பளத்தில் வேலை பார்ப்பதாக கூறி திருமணத்திற்கு பின் வேலைக்கு செல்லாமல் ஊதாரித்தனமாக குடித்துவிட்டு ஊர் சுற்றி வந்தார். எதிர்மனுதாரர் 10ம் வகுப்பு தோல்வியடைந்து எந்த ஒரு படிப்பும் படிக்கவில்லை என்பதை மனுதாரர் அறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தார். கடந்த 18.08.2019 அன்று பதின்பாரதி என்ற ஆண்குழந்தை தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து பிறந்தது. எதிர்மனுதாரர் குழந்தையை பார்க்கவரவில்லை. மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் இருந்தார். மனுதாரரின் பெற்றோர் சமரசமாக பேசி மனுதாரரை எதிர்மனுதாரரின் வீட்டில் விட்டுவிட்டு வந்துள்ளார்கள். அதன்பின்பும் எதிர்மனுதாரர் திருந்தாமல் குடித்துவிட்டு வந்து மீண்டும் மனுதாரரைஅடித்து கொடுமைப்படுத்தி வந்தார். மனுதாரரையும் அவரது குழந்தையையும் பராமரிக்காமல் இருந்தார். மனுதாரரின் குழந்தையின் நலன் கருதி சகித்துக்கொண்டு வாழ்ந்து வந்தார். எதிர்மனுதாரர் மனைவிக்கும் குழந்தைக்கும் ஆற்றவேண்டிய எந்த கடமைகளையும் செய்யாமல் வேண்டுமென்றே இருவரையும் புறக்கணித்து வந்தார். எதிர்மனுதாரர் பணம் மட்டுமே குறிக்கோளாக கொண்டு மனுதாரரை அடித்து துன்பப்படுத்தி அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்புவதையே வாடிக்கையாக கொண்டுள்ளார். பின்னர் சிறிது காலம் நன்றாக இருப்பதுபோல் நடித்து மனுதாரரை மீண்டும் அடித்து கொடுமைப்படுத்தி வந்தார். மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரரிடம் இது பற்றி கேட்டபோது எதிர்மனுதாரர் நான் அப்படித்தான் வாழ்வேன் உன் மகள் இஷ்டம் இருந்தால் இருக்கட்டும் என்றார். மனுதாரரை எதிர்மனுதாரர் சந்தேகம் கொண்டு

அசிங்கமாக பேசி அடித்து சித்ரவதை செய்து உடலளவிலும் மனதளவிலும் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரரையும் அவரது குழந்தையையும் பராமரிக்காமல் குழந்தைக்கு வைத்திருக்கும் பாலையும் குடித்துவிட்டு சென்றுவிடுவார். கடந்த 2020 ம் வருடம் நவம்பர் மாத வாக்கில் எதிர்மனுதாரர் அளவுக்கதிகமாக குடித்துவிட்டு மனுதாரரிடம் சண்டையிட்டு மனுதாரர் பெற்றோர் வீட்டிற்கு போ என்று அடித்து துன்புறுத்தியதனால் கடந்த 4 வருடமாக பெற்றோரின் பராமரிப்பில் மனுதாரர் இருந்து வருகிறார். பழையகாயலில் உள்ள தனியார் மீன் கம்பெனியில் வேலை பார்த்து மனுதாரர் குழந்தைக்கு உணவு மருத்துவ பள்ளி கட்டணங்கள் என அனைத்தும் மனுதாரரை பேணி பராமரித்து தனது பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வருகிறார். 11.11.2025 ம் தேதியில் சாத்தான்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தனக்கும் தனது குழந்தைக்கும் தேவையான உணவு பள்ளி மருத்துவ செலவுக்கும் பராமரிப்புக்கும் ஜீவனாம்சம் உதவி கேட்டு புகார் மனு அளித்துள்ளார். அந்த புகாரின் பேரில் விசாரணைக்கு ஆஜராகாமல் தவிர்த்து வந்துள்ளார். மனுதாரரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மூலம் பலமுயற்சிகள் எடுத்தும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் வாழ மறுத்து வருகிறார். இதனால் மனுதாரர் மனதளவிலும் உடலளவிலும் மிகவும் கஷ்டப்பட்டு இனியும் எதிர்மனுதாரரோடு வாழவேண்டாம் என நினைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை விடுத்தும் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தால், தோன்றா தரப்பாக்கி எதிர்மனுதாரரைப் பொறுத்து

ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

5. தீர்வு காண வேண்டிய பிரச்சனை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டன.

7. மனு சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனு சங்கதிகளை அனுசரித்து அவரது முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 23.08.2018 ம் தேதியில் தென்காசி மாவட்டம் அருணாப்பேரியில் உள்ள அருண்சுபா திருமண மண்டபத்தில் வைத்து பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடந்ததாகவும் திருமணத்தை நிரூபிக்கும் வகைக்கு திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், உபய மனுதாரர்களின் திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.3 ஆகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

9. உபய மனுதாரர்கள் இந்து முறைப்படி சட்டப்படி பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. திருமணத்திற்காக மனுதாரரின் பெற்றோர் மனுதாரருக்கு 10 பவுன் தங்க நகைகளும், எதிர்மனுதாரருக்கு 1/2 பவுன் மோதிரமும் வீட்டுக்கு தேவையான சீர்வரிசை

பொருட்களும் மனுதாரரின் பெற்றோர்கள் கொடுத்துள்ளதாகவும், 10 பவுன் நகை போதாது மேலும் கூடுதலாக நகை வாங்கி வா என்று எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து துன்பப்படுத்தி அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்புவதை வாடிக்கையாக கொண்டிருந்ததாகவும், திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் டிகிரி முடித்துவிட்டு 20,000 ரூபாய் வேலைக்கு செல்வதாக கூறியதாகவும் ஆனால் திருமணத்திற்கு பின் எந்த வேலைக்கும் செல்லாமல் குடித்துவிட்டு ஊதாரித்தனமாக ஊர் சுற்றிவந்ததாகவும் எதிர்மனுதாரர் 10ம் வகுப்பில் தோல்வியடைந்து அதற்கு மேல் எந்த படிப்பும் படிக்கவில்லை என்பது திருமணத்திற்கு பிறகுதான் மனுதாரருக்கு தெரியவந்ததாகவும் ம.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

**10**. திருமணத்தின்பயனாய் உபய மனுதாரர்களுக்கு 18.08.2019 அன்று பதின்பாரதி என்ற ஆண்குழந்தை பிறந்தாக கூறி அந்த குழந்தையின் பிறப்புச்சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளார். குழந்தை பிறந்ததை எதிர்மனுதாரர் பார்க்கவரவில்லை என்றும், குழந்தையை பராமரிக்காமல் எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து துன்பப்படுத்தி அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்ததாகவும் பின்னர் மனுதாரரின் பெற்றோர்கள் சமரசமாக பேசி மனுதாரரை எதிர்மனுதாரருடன் சகித்துக்கொண்டு குடும்பம் நடத்தும்படி அறிவுறுத்தியதாகவும் ஆனால் எதிர்மனுதாரர் பணம் மட்டுமே குறிக்கோளாக கொண்டு மனுதாரரிடம் சண்டையிட்டு கொடுமை செய்து வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**11**. மேலும் எதிர்மனுதாரர் திருந்தாமல் மனுதாரரை பராமரிக்காமல் தினமும்

பட்டினி போட்டு குழந்தைக்கு வைத்திருக்கும் பாலையும் குடித்துவிட்டு ஏன் என்று கேட்டால் காரணமே இல்லாமல் மனுதாரரை அடித்து துன்புறுத்தி வந்ததாகவும், ஒழுங்காக வேலைக்கு செல்லாமல் அளவுக்கதிகமாக குடித்து விட்டு மனுதாரரிடம் சண்டையிட்டு மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு போ என்று கூறியதால் மனுதாரா் கடந்த 4 வருடங்களாக அவரது பெற்றோர் வீடான பழையகாயலில் உள்ள மீன் கம்பெனியில் வேலை பார்த்து தன்னையும் குழந்தையையும் பராமரித்து வந்துள்ளதாகவும், அதனால் கடந்த 11.11.20256 சாத்தான்குளம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரருக்கும் அவரது குழந்தைக்கும் தேவையான உணவு உடை மருத்துவ செலவு பராமரிப்புக்கும் ஜீவனாம்சம் உதவி கேட்டு ம.சா.ஆ.5 புகார் கொடுத்தாகவும், அந்த புகாரின் பேரிலான விசாரணைக்கு எதிர்மனுதாரர் ஆஜராகவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. கடந்த 4 வருடங்களுக்கு மேலாக எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள்நண்பர்கள் ஆகியோர்கள் மூலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் அவை அனைத்தும் தோல்வியே முடிந்தது என்றும் எதிர்மனுதாரரின் இந்த செயல்கள் மனுதாரரையும் அவரது குழந்தையையும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கியதாகவும் இனியும் எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழ சாத்தியமில்லை என்பதால் விவாகரத்து கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறி சாட்சியமளித்துள்ளார். அவரது சாட்சியத்தின் வாயிலாக எதிர்மனுதாரர் தனது படித்த விவரத்தை மறைத்து திருமணம் செய்து மனுதாரரிடம் மேலும் நகைகள் கேட்டு அடித்து துன்புறுத்தி, மனுதாரரையும் குழந்தையையும்

பராமரிக்காமலும், வீட்டை விட்டு துரத்தி உடல் ரீதியாகவும் பணரீதியாகவும் துன்புறுத்தியுள்ளார் என துலங்குகிறது.

**13**. இந்நிலையில் இந்த மனுவில் பேரிலான விசாரணைக்கு ஆஜராகும்படி எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு அனுப்பியும் அறிவிப்பை பெற்றுக்கொள்ள மறுத்ததோடு மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுக்கவில்லை நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை செய்யவில்லை. மனு சங்கதிகளை ஆட்சேபித்தும் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை ஆட்சேபித்தும் வழக்கு நடத்திட எதிர்மனுதாரர் முன் வரவில்லை எனவும் தீர்மானிக்கிறது. மனுதாரரின் சாட்சியம் வாயிலாக எதிர்மனுதாரருக்கு மனுதாரருக்கும் அவரது குழந்தைக்கும் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் இல்லாமல் குடித்து விட்டு வந்து மனுதாரரையும் அவரது குழந்தையையும் அடித்து துன்புறுத்தி அவர்களுக்கு சாப்பாடு போடாமல் தட்டிக்கேட்ட மனுதாரரை உதாசீனப்படுத்தி மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் அறியமுடிகிறது.

14. மனுதாரரின் சாட்சியத்தின் வாயிலாக எதிர்மனுதாரரும் எந்த வேலைக்கும் செல்லாமல் மனுதாரரையும் குழந்தையையும் பராமரிக்காமல், அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யாமலும், மனுதாரரை சந்தேகப்பட்டு பிற ஆண்களுடன் சேர்த்து அசிங்கமாக பேசி, அடித்தும் குடித்துவிட்டு வந்து அடித்து துன்புறுத்தியும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கொடுமை செய்துள்ளார் என்று துலங்குகிறது. எனவே மனு சங்கதிகளை மனுதாரர் உரிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் வாயிலாக நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15**. எனவே மனுதாரரும் எதிர்மனுதாரரும் இனியும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால் அவர்களுடைய திருமண வாழ்க்கை மீள முடியாத அளவிற்கு பிளவு பட்டு விட்டது என தீர்மானித்து மனுதாரர் கேட்டுள்ளவாறு விவாகரத்து பரிகாரம் வழங்குவது நீதிக்குகந்தது என முடிவு செய்து மனுதாரர் கேட்டுள்ள பரிகாரத்தை அவருக்கு வழங்கிட இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில், மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 23.08.2018 ம் தேதியில் தென்காசி மாவட்டம் அருணாப்பேரியில் உள்ள அருண்சுபா திருமண மண்டபத்தில் வைத்து இந்து முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்து, 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.07.17 17:36:51 +0530

.

சார்பு நீதிபதி

திருவைகுண்டம்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி -</u>

மசா.1 திருமதி.சங்கீதா

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -**

| | | |
|---|---|---|
| மசாஆ.1 | 23.08.2018 | உபய மனுதாரர்களின் திருமண அழைப்பிதழ் (அசல்) |
| ம.சா.ஆ-2 | | திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் (அசல்) |
| மசாஆ.3 | | ஆதார் அட்டை(அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது ) |
| ம.சா.ஆ.4 | | குழந்தையின் பிறப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.5 | | சாத்தான்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகார் மனுவிற்கான ஏற்பு ரசீது |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் -** இல்லை

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.07.17 17:36:57 +0530

சார்பு நீதிபதி,

திருவைகுண்டம்.

சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்

எச்.எம்.ஓ.பி.எண்.17/2026

நேரிய/வரைவு உத்தரவு

நாள்: 17.07. 2026